1755

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை – 2017

| தரம் - 6 | குடியியற்கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

1. உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
   1) மேல் மாகாணம்   2) வடமத்திய மாகாணம்
   3) வடக்கு மாகாணம்   4) கிழக்குமாகாணம்

2. பாடசாலை பற்றிய தகவல்களை அறிய உதவும் மிக முக்கியமான ஆவணம்
   1) சஞ்சிகைகள்   2) பத்திரிகைகள்
   3) தினவரவுப்பதிவேடு   4) சம்பவத்திரட்டுப் புத்தகம்

3. எமது நாட்டின் தற்போதைய கல்வி அமைச்சர்
   1) ரணில் விக்கிரமசிங்க   2) அகிலவிராஜ் காரியவசம்
   3) குருகுலராசா   4) விஜயகலா மகேஸ்வரன்

4. பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர்
   1) வகுப்பாசிரியர்   2) ஆசிரியர்   3) அதிபர்   4) பகுதித்தலைவர்

5. கல்விசாரா ஊழியர்களில் அடங்குபவர்
   1) அலுவலக உதவியாளர்   2) அதிபர்   3) வகுப்பாசிரியர்   4) பகுதித்தலைவர்

6. பாடசாலை இலச்சினை உத்தியோக பூர்வமாகப் பொறிக்கப்பட்டிருப்பது
   1) மகுடவாசகத்தில்   2) பாடசாலைச் சீருடையில்
   3) அப்பியாசக் கொப்பியில்   4) தேசிய இலச்சினையில்

7. பாடசாலைகளில் மாணவருக்கான மதிய உணவினை வழங்கும் நிறுவனம்
   1) உலக சிறுவர் பாதுகாப்பு நிதியம்   2) யுனெஸ்கோ
   3) உலக உணவு திட்டம்   4) உலக சுகாதார தாபனம்

8. பாடசாலைக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் சந்தர்ப்பம்
   1) பரிசளிப்பு விழா   2) துக்க தினம்   4) பாடசாலைத் தினம்   4) விளையாட்டுப் போட்டி

9. ஒருவரிடம் காணப்படும் நற்பண்புகளில் ஒன்று
   1) பிறரை மதித்தல்   2) பிறரை நிந்தித்தல்   3) பொறாமைப்படுதல்   4) கோபப்படுதல்



kalvi.lk

10. பிறரிடம் நீர் அவதானிக்கக் கூடிய பலவீனங்களில் ஒன்று

1) வேலையில் ஒழுங்கு 2) மகிழ்ச்சியாக இருத்தல்

3) உண்மை பேசுதல் 4) பொறுமையின்மை

11. வேலை ஒன்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று

1) நேரம் மீதமாகும் 2) வேலை கடினமாகும் 3) தாமதம் ஏற்படும் 4) வீண்விரயமாகும்

12. எமது பிரதேசத்தின் மிகச் சிறிய நிர்வாக அலகு

1) மாவட்டம் 2) மாகாணம் 3) கிராம சேவையாளர் பிரிவு 4) மாநகரசபை

13. இலங்கை ஒரு அழகிய

1) தீபகற்பம் 2) தீவு 3) குடாநாடு 4) கண்டம்

14. இலங்கையிலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை

1) 9 2) 24 3) 22 4) 25

15. உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒன்று

1) மாகாண சபை 2) மாநகரசபை 3) மாவட்ட சபை 4) கிராம சபை

16. இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்

1) வடமாகாணம் 2) மேல் மாகாணம் 3) கிழக்கு மாகாணம் 4) மத்திய மாகாணம்

17. பௌதிக வளங்களுள் ஒன்றான கனியவளம் மனிதனுக்குப் பயன்படும் விதங்களில் ஒன்று

1) விவசாயம் 2) கைத்தொழில் 3) வசிப்பிடம் 4) பூங்கா

18. மனிதன் ஒற்றுமையாகச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று

1) நேரம் வீணாகும் 2) செலவு அதிகமாகும்

3) கலாசாரம் சீர்கெடும் 4) நட்புறவு ஏற்படும்

19. மாநகர சபைக்குப் பொறுப்பானவர் அழைக்கப்படும் முறை

1) நகர பிதா 2) நகரத்தலைவர் 3) தவிசாளர் 4) அரச அதிபர்

20. சேவையைப் பெற்றுக் கொள்பவரின் கடமைகளுள் ஒன்றாக அமைவது

1) சேவை வழங்குபவருடன் நட்புறவுடன் செயற்படல்

2) வரிப்பணத்தை முறையாகச் செலுத்துதல்

3) வினைத்திறனுடன் கடமை புரிதல்

4) வழிகாட்டல்களை ஒழுங்காகப் பின்பற்றுதல்

(20X2=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட (5) ஐந்து வினாக்களிற்கு விடை தருக

01.

1. இரண்டாந் தவணையில் குடியியற்கல்விப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை இரண்டு தருக.
2. கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகினைத் தருக.
3. கணிப்பீடுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்திய பொருட்கள் மூன்று தருக.
4. கணிப்பீடுகளை மேற்கொண்டமையால் நீர் அடைந்த பயன்கள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)

02.

1. பாடசாலை மாணவன் என்ற வகையில் உமது கடமைகள் மூன்று தருக.
2. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் மூன்று தருக.
3. பாடசாலை ஒழுங்கமைப்பில் உள்ள மூன்று நபர்களைத் தருக.
4. பாடசாலைத் தலைவர் என்ற வகையில் அதிபரின் கடமைகள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)

03.

1. பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம் பெறும் ஏனைய குழுக்கள் மூன்று தருக.
2. உம்மிடம் காணப்படும் திறமைகள் மூன்று தருக.
3. திட்டமிடுவதாலும் ஒழுங்கமைப்பதனாலும் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.
4. பாடசாலை ஒன்றின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)

04.

1. பாடசாலை சமூகத்திற்கு வழங்கும் தகவல்கள் மூன்று தருக.
2. பாடசாலையில் உமது திறமைகளை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. பௌதிக வளங்களுள் ஒன்றான நிலம் எமக்குப் பயன்படும் மூன்று சந்தர்ப்பங்களைத் தருக.
4. வளங்களிலிருந்து உச்சப்பயன் பெறக்கூடிய முறைகள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)

05.

1. எமது பிரதேசத்தில் நீர் இனங்காணக்கூடிய மனித வளங்கள் மூன்று தருக.
2. மனித வளத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி வழங்குதல் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.
3. பிரதேச மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
4. பௌதிக வளங்களைப் பாதுகாக்கும் முறைகள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)

06.

1. மாநகர சபைகள் மூலம் ஆற்றப்படும் சேவைகள் மூன்று தருக.
2. உமது பிரதேசத்திலுள்ள சங்கங்கள் மூன்று தருக.
3. சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள் மூன்று தருக.
4. மக்களுக்குச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகள் மூன்று தருக.

(4X3=12புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**